## மாவட்ட மேலாளர்,
## தமிழ்நாடு மாநில வாணிப கழகம்,
## (தமிழ்நாடு அரசு நிறுவனம்),
## கடலூர்

அலுவலக முகவரி :– சிப்காட் வளாகம், குடிகாடு,
கடலூர் 607 005
தொலைபேசி எண்: **04142- 239310 & 239152**

ந.க.எண்.ஆர்.வி.10/603/ 2009/ நாள்: 03.07.2009

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் (டாஸ்மாக்) சார்பில் நடத்தப்பட்டு வரும் மதுபானக் கடையை சார்ந்த மதுக்கூடங்களில் தின்பண்டம் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம் செய்து விற்பனை செய்து கொள்ள அனுமதி (Bar Licence) வழங்குவதற்காக ஒப்பந்தகாரர்களிடமிருந்து 31.07.2010 வரையிலான ஓராண்டு காலத்திற்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது.

விவரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை கடலூர் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் **04.07.2009** முதல் 20.07.**2009** வரை காலை **10.00** மணி முதல் பிற்பகல் **5.45** மணி வரை ஒப்பந்தப்புள்ளி ஆவணம் ஒன்றுக்கு ரூ.**500/–** (ரூபாய் ஐநூறு மட்டும்) வீதம் (விற்பனை வரி உட்பட) மாவட்ட மேலாளர் டாஸ்மாக் கடலூர்–5 என்ற பெயரில், கடலூரில் காசாக்கக்கூடியதான வங்கி வரை வோலை (Demand Draft) மூலமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை www.cuddalore.tn.nic.in என்ற இணைய தளத்திலிருந்தும் எடுத்து பூர்த்தி செய்தும் சமர்பிக்கலாம். அஞ்சலக கால தாமதங்களுக்கு தமிழ்நாடு மாநில வாணிப கழகம் பொறுப்பல்ல. மாவட்ட மேலாளர், டாஸ்மாக், கடலூர்–5 என்ற பெயரில் நகராட்சி /நகரியம் பகுதிக்குட்பட்ட மதுக்கூடம் ஒன்றுக்கு ரூ.**20,000/–** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வீதமும், மற்ற பகுதிகளில் அமைந்துள்ள மதுக்கூடங்களுக்கு மதுக்கூடம் ஒன்றுக்கு ரூ.**5,000/–** (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வீதமும் பிணை வைப்புத் தொகையாக (EMD) ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பத்துடனும் வங்கி வரைவோலையை இணைத்து அனுப்ப வேண்டும். பிணை வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையின்றி பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனை செய்யப்படமாட்டாது. சரியாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் கையொப்பம் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

21.07.2009 அன்று மாலை **5.00** மணி வரை தான் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும். நிர்ணயிக்கப்பட்ட/குறிப்பிட்ட நேரம்/தேதிக்குப் பிறகு (அஞ்சலக தாமதம் உட்பட) வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளித்த வருகை புரிந்த விண்ணப்பதாரர்கள் முன்னிலையில், மாவட்டமேலாளர், டாஸ்மாக், கடலூர் அவர்களால், அவரின் அலுவலகத்தில் 22.07.2009 அன்று காலை 11.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் எந்தவித காரணங்களையும் கூறாமலேயே நிராகரிக்க மாவட்ட மேலாளருக்கு முழு அதிகாரமுள்ளது.

தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முடிவு செய்யப்பட்ட தொகையைபோல இரண்டு மாதங்களுக்கான தொகையை, காப்புத் தொகையாக மாவட்ட மேலாளர் கணக்கில் அவர் குறிப்பிட்ட தேதிக்குள் ஒவ்வொரு மதுபானக்கூடத்திற்கும் தனித்தனியாக காப்புத் தொகையாக செலுத்த வேண்டும். தவறினால் பிணை வைப்புத் தொகை அரசுக்கு ஆதாயம் செய்யப்படும். இதை தவிர மேலும் உரிமம் எடுத்து நடத்தப்படும் முதல் மாதத்திற்காக உரிமத் தொகையினையும் தனியாக செலுத்த வேண்டும். இந்த ஒப்பந்தம் 31.7.2010 வரையிலான ஓராண்டு காலத்திற்கு மட்டும் செல்லத்தக்கதாகும்.

மதுக்கடைகளின் பெயர் மற்றும் குறைந்தபட்ச குறுமத்தொகை விபரம் குறித்து கடலூர் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அலுவலக பணி நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி அனுப்பும் உறையின்மீது கண்டிப்பாக கடை எண் மற்றும் அமைந்துள்ள இடம் பற்றிய விபரங்கள் குறிக்கப்படவேண்டும்.

மாவட்ட மேலாளர்,
டாஸ்மாக்,கடலூர்–5.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்— கடலூர் மாவட்டம்**

அனுப்புனர்
திரு. கா.வெங்கடராமன்,
மாவட்ட மேலாளர்/
டாஸ்மாக் , கடலூர்

பெறுநர்
தேசிய தகவல் மையம் **(NIC)**
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர்

ந. க. எண். /ஆர்.வி.10/**603/09/** நாள்: **03.07.2009**

அய்யா,

பொருள்: டாஸ்மாக்(சில்லறை விற்பனை) –கடலூர் மாவட்டம்— மதுக்கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் தின்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம்— **ஒப்பந்தப்புள்ளி** அறிவிப்பு 05.07.2009 அன்று நாளேடுகளில் விளம்பரம் செய்யப்படுகிறது— (NIC)–க்கில் ஏற்றி விளம்பரம் செய்வது தொடர்பாக

.

பார்வை: சென்னை டாஸ்மாக், மேலாண்மை இயக்குநரின் கடிதம் Rc.No.P1/10725/2006/ நாள்:23.06.2009

----------

கடலூர் மாவட்டத்தில் டாஸ்மாக் மூலம் நடத்தப்பட்டு வரும் மதுபானக் கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் திண்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம் செய்வது குறித்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் கடலூர் மாவட்ட, தேசிய தகவல் மையத்தின் **(NIC)** முகவரியான www.cuddalore.tn.nic.in ல் விளம்பரப்படுத்த அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பம் (Annexure-1) மற்றும் ஒப்பந்தப்புள்ளி (Annexure—2) ஆகியவைகள் இத்துடன் இணைக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. இதனை மேற்கண்ட NIC- முகவரியில் ஏற்றி விளம்பரம் செய்ய அன்புடன் என கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட மேலாளர்
டாஸ்மாக்,கடலூர் –5.

நகல்

1) மேலாண்மை இயக்குநர், டாஸ்மாக், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2) முதுநிலை மண்டல மேலாளர், டாஸ்மாக், திருச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3) மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்– கடலூர் மாவட்டம்

| அனுப்புனர் | பெறுநர் |
|---|---|
| திரு. கா.வெங்கடராமன், | செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி, |
| மாவட்ட மேலாளர் | மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகம், |
| டாஸ்மாக் , கடலூர் | கடலூர். |

**ந. க. எண். /ஆர்.வி.10/603/09/ நாள்: 03.07.2009**

அய்யா,

பொருள்: டாஸ்மாக்(சில்லறை விற்பனை) –கடலூர் மாவட்டம்– மதுக்கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் தின்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம்– **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அழைப்பு** – நாளேட்டில் விளம்பரம் செய்திட கோரல் –தொடர்பாக.

பார்வை: சென்னை டாஸ்மாக், மேலாண்மை இயக்குநரின் கடிதம் Rc.No.P1/10725/2006/ நாள்:23.06.2009

----

கடலூர் மாவட்டத்தில் டாஸ்மாக் மூலம் நடத்தப்பட்டு வரும் மதுபானக் கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் திண்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம் செய்வது குறித்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தின் 6 நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன். இந்த விளம்பரத்தினை 07.2009 ஆம் தேதி வெளி வரும்படி **தினத்தந்தி** மற்றும் **தினமலர்** நாளிதழ்களில் உள்பக்கம் விளம்பரம் செய்ய தக்க நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இவ்வலுவலகத்தில் இதற்கு முந்தைய விளம்பரக் கட்டணம் ஏதும் பாக்கி இல்லை எனவும் தற்போது வெளியிடக் கோரும் விளம்பரத்திற்கான கட்டணம் வழங்க போதுமான நிதி வசதி உள்ளது எனவும், விளம்பரத்திற்கான கட்டணப் பட்டியல் கிடைக்கப் பெற்ற உடன் காசோலை மூலம் தொகை வழங்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இவ்விளம்பரத்தினை 07.2009 தேதி அன்று வெளி வரும் நாளிதழில் உள்பக்கம் விளம்பரம் செய்ய தக்க நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட மேலாளர்,
டாஸ்மாக்,கடலூர்–5.

நகல்

1) மேலாண்மை இயக்குநர், டாஸ்மாக், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2) முதுநிலை மண்டல மேலாளர், டாஸ்மாக், திருச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3) மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

மாவட்ட மேலாளர் அலுவலகம்,
டாஸ்மாக் லிமிடெட்,
கடலூர் –5.

# ஒப்பந்தப்புள்ளி – அறிவிப்பு

தமிழ்நாடு மாநில வாணிப கழக டாஸ்மாக் மாவட்ட மேலாளர் (தமிழ்நாடு அரசு நிறுவனம்) கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினமலர் நாளேட்டில் 05/07/2009 அன்று வெளியிடப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) 23.07.2009 அன்று திறக்கப்படும் என 14.7.09–ல் குறிப்பிடப்பட்டிருந்தது. நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) 25.7.09 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு திறக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

துணை ஆட்சியர்/மாவட்ட மேலாளர்,
டாஸ்மாக், கடலூர் –5.

மாவட்ட மேலாளர் அலுவலகம்,
டாஸ்மாக் லிமிடெட்,
கடலூர்–5.

# ஒப்பந்தப்புள்ளி– அறிவிப்பு

தமிழ்நாடு மாநில வாணிப கழக டாஸ்மாக் மாவட்ட மேலாளர் (தமிழ்நாடு அரசு நிறுவனம்) கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினத்தந்தி நாளேட்டில் 05/07/2009 அன்று வெளியிடப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) 23.07.2009 அன்று திறக்கப்படும் என 14.7.09–ல் குறிப்பிடப்பட்டிருந்தது. நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) 25.7.09 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு திறக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

துணை ஆட்சியர்/மாவட்ட மேலாளர்,
டாஸ்மாக், கடலூர்–5.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்— கடலூர் மாவட்டம்**

அனுப்புனர்
திரு. கா.வெங்கடராமன்,
மாவட்ட மேலாளர்/
டாஸ்மாக் , கடலூர்

பெறுநர்
தேசிய தகவல் மையம் **(NIC)**
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர்

ந. க. எண். /ஆர்.வி.10/**603/09/** நாள்: **17.07.2009**

அய்யா,

பொருள்: டாஸ்மாக்(சில்லறை விற்பனை) —கடலூர் மாவட்டம்— மதுக்கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் தின்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம்— **ஒப்பந்தப்புள்ளி** அறிவிப்பு 19.7.2009 திருத்தம் நாளேடுகளில் விளம்பரம் செய்யப்படுகிறது— (NIC)—க்கில் ஏற்றி விளம்பரம் செய்தல் தொடர்பாக

.

பார்வை: சென்னை டாஸ்மாக், மேலாண்மை இயக்குநரின் கடிதம் Rc.No.P1/10725/2006/ நாள்:23.06.2009

----------

கடலூர் மாவட்டத்தில் டாஸ்மாக் மூலம் நடத்தப்பட்டு வரும் மதுபானக் கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் திண்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம் செய்வது குறித்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் கடலூர் மாவட்ட, தேசிய தகவல் மையத்தின் **(NIC)** முகவரியான www.cuddalore.tn.nic.in ல் விளம்பரப்படுத்த அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த , 23.07.2009 அன்று திறக்கப்பட இருந்த ஒப்பந்தப்புள்ளி டெண்டர் நிர்வாக காரணங்களை முன்னிட்டு 25.07.2009 அன்று சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் திறக்கப்படும் என்ற தகவலை அறிவிக்கப்படுகிறது. கடலூர் மாவட்ட, தேசிய தகவல் மையத்தின் **(NIC)** முகவரியான www.cuddalore.tn.nic.in ல் விளம்பரப்படுத்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அறிவிப்பு இத்துடன் அனுப்பப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட மேலாளர்
டாஸ்மாக்,கடலூர் —5.

நகல்

1 மேலாண்மை இயக்குநர், டாஸ்மாக், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2 முதுநிலை மண்டல மேலாளர், டாஸ்மாக், திருச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3 மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**மாவட்ட மேலாளர்,**
**தமிழ்நாடு மாநில வாணிப கழகம்,**
**(தமிழ்நாடு அரசு நிறுவனம்),**
**கடலூர்**

அலுவலக முகவரி :– சிப்காட் வளாகம், குடிகாடு,
கடலூர் 607 005
தொலைபேசி எண்: 04142- 239310 & 239152

ந.க.எண்.ஆர்.வி.10/603/ 2009/ நாள்: 03.07.2009

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் (டாஸ்மாக்) சார்பில் நடத்தப்பட்டு வரும் மதுபானக் கடையை சார்ந்த மதுக்கூடங்களில் தின்பண்டம் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம் செய்து விற்பனை செய்து கொள்ள அனுமதி (Bar Licence) வழங்குவதற்காக ஒப்பந்தகாரர்களிடமிருந்து 31.07.2010 வரையிலான ஓராண்டு காலத்திற்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது.

விவரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை கடலூர் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் **04.07.2009** முதல் 20.07.**2009** வரை காலை **10.00** மணி முதல் பிற்பகல் **5.45** மணி வரை ஒப்பந்தப்புள்ளி ஆவணம் ஒன்றுக்கு ரூ.**500/–** (ரூபாய் ஐநூறு மட்டும்) வீதம் (விற்பனை வரி உட்பட) மாவட்ட மேலாளர் டாஸ்மாக் கடலூர்–5 என்ற பெயரில், கடலூரில் காசாக்கக்கூடியதான வங்கி வரை வோலை (Demand Draft) மூலமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை www.cuddalore.tn.nic.in என்ற இணைய தளத்திலிருந்தும் எடுத்து பூர்த்தி செய்தும் சமர்பிக்கலாம். அஞ்சலக கால தாமதங்களுக்கு தமிழ்நாடு மாநில வாணிப கழகம் பொறுப்பல்ல. மாவட்ட மேலாளர், டாஸ்மாக், கடலூர்–5 என்ற பெயரில் நகராட்சி /நகரியம் பகுதிக்குட்பட்ட மதுக்கூடம் ஒன்றுக்கு ரூ.**20,000/–** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வீதமும், மற்ற பகுதிகளில் அமைந்துள்ள மதுக்கூடங்களுக்கு மதுக்கூடம் ஒன்றுக்கு ரூ.**5,000/–** (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வீதமும் பிணை வைப்புத் தொகையாக (EMD) ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பத்துடனும் வங்கி வரைவோலையை இணைத்து அனுப்ப வேண்டும். பிணை வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையின்றி பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனை செய்யப்படமாட்டாது. சரியாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் கையொப்பம் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

21.07.2009 அன்று மாலை **5.00** மணி வரை தான் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும். நிர்ணயிக்கப்பட்ட/குறிப்பிட்ட நேரம்/தேதிக்குப் பிறகு (அஞ்சலக தாமதம் உட்பட) வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளித்த வருகை புரிந்த விண்ணப்பதாரர்கள் முன்னிலையில், மாவட்டமேலாளர், டாஸ்மாக், கடலூர் அவர்களால், அவரின் அலுவலகத்தில் 22.07.2009 அன்று காலை 11.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் எந்தவித காரணங்களையும் கூறாமலேயே நிராகரிக்க மாவட்ட மேலாளருக்கு முழு அதிகாரமுள்ளது.

தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முடிவு செய்யப்பட்ட தொகையைபோல இரண்டு மாதங்களுக்கான தொகையை, காப்புத் தொகையாக மாவட்ட மேலாளர் கணக்கில் அவர் குறிப்பிட்ட தேதிக்குள் ஒவ்வொரு மதுபானக்கூடத்திற்கும் தனித்தனியாக காப்புத் தொகையாக செலுத்த வேண்டும். தவறினால் பிணை வைப்புத் தொகை அரசுக்கு ஆதாயம் செய்யப்படும். இதை தவிர மேலும் உரிமம் எடுத்து நடத்தப்படும் முதல் மாதத்திற்காக உரிமத் தொகையினையும் தனியாக செலுத்த வேண்டும். இந்த ஒப்பந்தம் 31.7.2010 வரையிலான ஓராண்டு காலத்திற்கு மட்டும் செல்லத்தக்கதாகும்.

மதுக்கடைகளின் பெயர் மற்றும் குறைந்தபட்ச குறுமத்தொகை விபரம் குறித்து கடலூர் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அலுவலக பணி நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி அனுப்பும் உறையின்மீது கண்டிப்பாக கடை எண் மற்றும் அமைந்துள்ள இடம் பற்றிய விபரங்கள் குறிக்கப்படவேண்டும்.

மாவட்ட மேலாளர்,
டாஸ்மாக்,கடலூர்–5.

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்– கடலூர் மாவட்டம்

அனுப்புனர்
திரு. கா.வெங்கடராமன்,
மாவட்ட மேலாளர்/
டாஸ்மாக் , கடலூர்

பெறுநர்
தேசிய தகவல் மையம் **(NIC)**
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர்

ந. க. எண். /ஆர்.வி.10/**603/09/** நாள்: **03.07.2009**

அய்யா,

பொருள்: டாஸ்மாக்(சில்லறை விற்பனை) –கடலூர் மாவட்டம்– மதுக்கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் தின்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம்– **ஒப்பந்தப்புள்ளி** அறிவிப்பு 05.07.2009 அன்று நாளேடுகளில் விளம்பரம் செய்யப்படுகிறது– (NIC)–க்கில் ஏற்றி விளம்பரம் செய்வது தொடர்பாக

.

பார்வை: சென்னை டாஸ்மாக், மேலாண்மை இயக்குநரின் கடிதம் Rc.No.P1/10725/2006/ நாள்:23.06.2009

---------

கடலூர் மாவட்டத்தில் டாஸ்மாக் மூலம் நடத்தப்பட்டு வரும் மதுபானக் கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் திண்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம் செய்வது குறித்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் கடலூர் மாவட்ட, தேசிய தகவல் மையத்தின் **(NIC)** முகவரியான www.cuddalore.tn.nic.in ல் விளம்பரப்படுத்த அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பம் (Annexure-1) மற்றும் ஒப்பந்தப்புள்ளி (Annexure—2) ஆகியவைகள் இத்துடன் இணைக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. இதனை மேற்கண்ட NIC- முகவரியில் ஏற்றி விளம்பரம் செய்ய அன்புடன் என கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட மேலாளர்
டாஸ்மாக்,கடலூர்–5.

நகல்
1) மேலாண்மை இயக்குநர், டாஸ்மாக், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2) முதுநிலை மண்டல மேலாளர், டாஸ்மாக், திருச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3) மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

மாவட்ட மேலாளர் அலுவலகம்,
டாஸ்மாக் லிமிடெட்,
கடலூர் –5.

# ஒப்பந்தப்புள்ளி – அறிவிப்பு

தமிழ்நாடு மாநில வாணிப கழக டாஸ்மாக் மாவட்ட மேலாளர் (தமிழ்நாடு அரசு நிறுவனம்) கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினமலர் மற்றும் தினத்தந்தி நாளேடுகளில் 05/07/2009 அன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த , 22.07.2009 அன்று திறக்கப்பட இருந்த ஒப்பந்தப்புள்ளி டெண்டர் நிர்வாக காரணங்களை முன்னிட்டு 23.07.2009 அன்று வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் திறக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

துணை ஆட்சியர்/மாவட்ட மேலாளர்,
டாஸ்மாக், கடலூர் –5.

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்— கடலூர் மாவட்டம்

அனுப்புனர்
திரு. கா.வெங்கடராமன்,
மாவட்ட மேலாளர்/
டாஸ்மாக் , கடலூர்

பெறுநர்
தேசிய தகவல் மையம் **(NIC)**
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர்

ந. க. எண். /ஆர்.வி.10/**603/09/** நாள்: **11.07.2009**

அய்யா,

பொருள்: டாஸ்மாக்(சில்லறை விற்பனை)—கடலூர் மாவட்டம்— மதுக்கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் தின்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம்— **ஒப்பந்தப்புள்ளி** அறிவிப்ப 12.5.2009 திருத்தம் நாளேடுகளில் விளம்பரம் செய்யப்படுகிறது— (NIC)—க்கில் ஏற்றி விளம்பரம் செய்தல் தொடர்பாக

.

பார்வை: சென்னை டாஸ்மாக், மேலாண்மை இயக்குநரின் கடிதம் Rc.No.P1/10725/2006/ நாள்:23.06.2009

---------

கடலூர் மாவட்டத்தில் டாஸ்மாக் மூலம் நடத்தப்பட்டு வரும் மதுபானக் கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் திண்பண்டங்கள் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரம் செய்வது குறித்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் கடலூர் மாவட்ட, தேசிய தகவல் மையத்தின் **(NIC)** முகவரியான www.cuddalore.tn.nic.in ல் விளம்பரப்படுத்த அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த , 22.07.2009 அன்று திறக்கப்பட இருந்த ஒப்பந்தப்புள்ளி டெண்டர் நிர்வாக காரணங்களை முன்னிட்டு 23.07.2009 அன்று வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் திறக்கப்படும் என்ற தகவலை அறிவிக்கப்படுகிறது. கடலூர் மாவட்ட, தேசிய தகவல் மையத்தின் **(NIC)** முகவரியான www.cuddalore.tn.nic.in ல் விளம்பரப்படுத்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அறிவிப்பு இத்துடன் அனுப்பப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட மேலாளர்
டாஸ்மாக்,கடலூர்—5.

நகல்

1 மேலாண்மை இயக்குநர், டாஸ்மாக், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2 முதுநிலை மண்டல மேலாளர், டாஸ்மாக், திருச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3 மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**உரிம காலம் 31.7.2010 வரை மட்டுமே**

கடை எண்

பதிவேட்டின் வரிசை எண். :

# டாஸ்மாக்

## தமிழ்நாடு மாநில வாணிப கழகம், கடலூர்

மதுபான சில்லரை விற்பனை கடைகளில் உள்ள மதுக்கூடங்களில் தின்பண்டம் விற்பனையுடன் காலி பாட்டில்கள் சேகரித்து ஒட்டுமொத்த விற்பனை செய்ய ஒப்பந்தப்புள்ளி தெரிவிக்கும் விண்ணப்பம்

1. விண்ணப்பதாரர் பெயர், நிரந்தர முகவரி, தொலைபேசி எண். ......

2. விண்ணப்பதாரரது தற்போதைய முகவரி, தொலைபேசி எண், வயது ......

3. பணி மேற்கொள்ளப்பட உள்ள மாவட்டத்தின் பெயர் ......

4. ஒப்பந்தப்புள்ளி கோரும் கடை எண் மற்றும் இருப்பிடம் ......

5. மேற்படி மாவட்டத்தில் பணி மேற்கொள்ளப்பட தெரிவிக்கும் பகுதியின் விபரம் ......

அ) மாநகராட்சி .....

ஆ) அல்லாத பிற பகுதி .....

6. விண்ணப்பதாரரது விபரம் (அரசுத்துறை/ தனியார் போன்றவை) ......

7. இத்துறையில் முன் அனுபவம் உள்ளதா? ......

8. வேறு அரசுதுறை, கழகம், வாரியம் போன்றவற்றில் பணி மேற்கொண்டிருப்பின் அதன் விபரம் ......

9. செலுத்தப்பட்ட பிணை வைப்பு தொகை விபரம் ......

அ) தொகை ......

ஆ) வரைவோலை எண் .....

இ) நாள் .....

ஈ) தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் பெயர் .....

10. டெண்டர் கோரும் கடைக்காக அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ...... ரூ.

11. டெண்டர் கோரும் தொகை ..... ரூ.

மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் என்னால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவையென்றும் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி செயல்பட மாட்டேன் என்றும் உறுதி அளிக்கிறேன்.

நாள் : விண்ணப்பதாரர் கையொப்பம்.

இடம்:

பின் குறிப்பு:

டெண்டர் கோரப்படும் கடை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே உரிய பிணை வைப்புத் தொகையுடன் விண்ணப்பிக்க வேண்டும். ஒரு கடைக்கு ஒரு நபர் ஒரு விண்ணப்பம் மட்டுமே செய்ய வேண்டும்.

# நிபந்தனைகள்

1) நிர்ணயிக்கப்படும் சதவீதத்தை குறைந்தபட்ச சதவீதமாக வைத்து டெண்டர் முறையில் கடைவாரியாக அதிகபட்ச சதவீதம் கோருபவருக்கு மாவட்ட மேலாளரால் மதுக்கூட தின்பண்ட விற்பனை உரிமம் மற்றும் காலி பாட்டில் சேகரித்துக் கொள்ளும் உரிமத்தையும் அளிக்கப்படும்.

2) ஒப்பந்ததாரர் தண்ணீர், அனுமதிக்கப்பட்ட குளிர்பானங்கள், சுண்டல், அவித்த மற்றும் வறுத்த பயிறு வகைகள், முட்டை, மீன் மற்றும் இறைச்சி பண்டங்கள் ஆகியவற்றை நியாயமான விலைக்கு மட்டுமே விற்க அனுமதியுண்டு. வெளியில் சமைத்த தின்பண்டங்களை மட்டுமே விற்க அனுமதிக்கப்படும். அடுப்பு வைத்து சமைத்தல் கூடாது.

3) மின் கட்டணம், தண்ணீர் வசதி மற்றும் இடவசதி போன்ற அனைத்து செலவுகளையும் ஒப்பந்தக்காரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4) எக்காரணம் கொண்டும், பிராணிகளையோ, பறவைகளையோ உயிருடன் மதுகூடத்திற்கு எடுத்து வருவதோ, இருப்பு வைப்பதோ அனுமதிக்கப்பட மாட்டாது.

5) அதே போன்று மேற்படி விலங்குகளை/பறவைகளை மதுக்கூடத்தில் வைத்து கொல்வதோ அல்லது சமைப்பதோ அனுமதிக்கப்படமாட்டாது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்படும்.

6) இந்த உரிம காலம் **31.7.2010** வரை ஆகும். இது முற்றிலும் ஒரு தற்காலிகமான அனுமதி மட்டுமே. ஒவவொரு மாதமும் ஒப்பந்ததாரரின் செயல்பாடுகள் மாவட்ட மேலாளரால் கூர்ந்து ஆய்வு செய்யப்படும். பிரதி மாதம் **25–ஆம்** தேதிக்குள் அடுத்த மாத உரிமத் தொகையை செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

7) ஒப்பந்ததாரர்களின் செயல்பாடுகளில் குறைபாடுகள் இருந்தாலோ, முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டாலோ உரிய விசாரணைக்கு பின்னர் உரிமம் ரத்து செய்யப்படுவது மட்டுமின்றி முன் வைப்புத் தொகையை டாஸ்மாக் நிறுவனமே தக்க வைத்துக் கொள்ளவும், டாஸ்மாக் நிறுவனத்திற்கு முழு உரிமையும் உண்டு.

8) இரண்டு மாத உரிமத் தொகையை காப்புத் தொகையாக ஒப்பந்ததாரர் டிமாண்ட் டிராப்ட் மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். இதுபோக நடப்பு மாதத்திற்கான தொகையை முன்மாத இறுதியில் செலுத்தி உரிமத்தை மாதந்தோறும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். உரிமத்தொகை என்பது டெண்டர் மூலம் நிர்ணயிக்கப்படும் சதவீதத் தொகை. அது அந்தந்த கடையின் முந்தைய 12 மாதத்திற்கான விற்பனை தொகையில் அதிகபட்சமான விற்பனைத் தொகையின் சதவிகித்தைக் கணக்கிட்டு நிர்ணயிக்கப்படும். ஒப்பந்தக்காலத்தில் மாத விற்பனை மேலே குறிப்பிட்ட விற்பனைத் தொகையைவிட அதிகமாக இருந்தால் அந்த விற்பனைத் தொகையின் சதவீதத்தை டாஸ்மாக்கிற்கு அடுத்த மாதத்திற்குள் செலுத்த வேண்டும். அந்த மாதத்தின் விற்பனை தொகை குறைவாக இருந்தால் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட சதவீத தொகையையே உரிமத் தொகையாக செலுத்த வேண்டும். சும்பந்தப்பட்ட கடையின் கடைசி 12 மாதத்தின் அதிகபட்சமாக விற்பனைத் தொகை தனியே தெரிவிக்கப்பட்டுள்ளது. முன் வைப்புத் தொகை ஒரு வருடம் கழித்து திருப்பித் தரப்படும்.

9) மேற்படி உரிமம் மதுக்கூடங்களில் தின்பண்டம் விற்பதற்கும், காலி பாட்டில்களை சேகரித்துக் கொள்ள மட்டுமே. மற்றபடி மதுக்கூடம் டாஸ்மாக் நிறுவனத்தின் முழு கட்டுப்பாட்டில் இருக்கும் டாஸ்மாக் நிறுவனம் நியமிக்கும் பணியாளர் இந்த மதுக்கூட அனைத்து செயல்பாடுகளையும் கண்காணிப்பார். மதுக்கூட சாவியும் டாஸ்மாக்கிடமே இருக்க வேண்டும்.

10) வாடிக்கையாளர் எந்தவித வற்புறுத்தலுமின்றி மேற்படி மதுக்கூடத்தில் தானே விட்டுச் செல்லும் காலி பாட்டில்களை மட்டுமே மேற்படி ஒப்பந்ததாரர் சேகரிக்க வேண்டும். ஏக்காரணம் கொண்டும் வாடிக்கையாளர்களை காலி பாட்டில்களை திருப்பி தரும்படி வற்புறுத்தக்கூடாது.

11) மதுக்கூடத்தின் அனுமதிக் கட்டணம் பிரதி மாதம் 5–ம் தேதிக்குள் செலுத்திவிட வேண்டும். மதுக்கூடங்களில் ஒப்பந்தகாரர், தான் நுகர்வேருக்கு அளிக்கும் வசதிகளுக்காக (உதாரணமாக குளிர் சாதன வசதி) தனியே சேவைக் கட்டணம் வசூலிக்க விரும்பினால் அதற்கென டாஸ்மாக் நிறுவனத்தின் முன் அனுமதி பெற வேண்டும். அப்படிப்பட்ட இனங்களில் மாவட்ட மேலாளர் நிர்ணயிக்கும் கூடுதல் சிறப்புக் கட்டணத்தை ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டும்.

மேற்படி நுகர்வோரிடம் வசூலிக்கும் சேவைக் கட்டணத்திற்கான உரிய ரசீதுகள் ஒப்பந்தகாரரால் நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அது குறித்த கணக்கு விபரங்களையும் டாஸ்மாக் நிறுவனத்திற்கு அளிக்க வேண்டும். மேற்படி சேவைக் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகள் ஏதுமிருப்பின் அவற்றையும் ஒப்பந்தக்காரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

12) ஒப்பந்தக்காரர் வருமான வரி செலுத்துபவராயின், டாஸ்மாக் நிறுவனத்தின் தின்பண்ட உரிமம் பெற்று செயல்பட்ட காலத்திற்கு தொடர்புடைய தனது வருமான வரி விபரங்களை வருமான வரித்துறைக்கு சமர்ப்பித்திருந்தால் அதன் விபரங்களை டாஸ்மாக் நிறுவனத்திற்கு அளிக்க வேண்டும்.

13) காலி பாட்டில்களை உடனுக்குடன் சேகரித்து அப்புறப்படுத்தி விட வேண்டும் எக்காரணம் கொண்டும் டாஸ்மாக் மதுக்கூடத்தில் காலி பாட்டில் சேகரித்து வைக்கக்கூடாது. தவறும்பட்சத்தில் காலி பாட்டில்களை டாஸ்மாக் மதுக்கூடங்களில் இருப்பு வைக்கும் நேரத்திற்காக மாவட்ட மேலாளரால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூலிக்க டாஸ்மாக் நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

14) காலி பாட்டில் சேகரிப்பதற்கும் தின்பண்ட விற்பனைக்கும் தேவையான உரிய ஏற்பாடுகளையும், பணியாளர்களையும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பேற்றுச் செய்துக் கொள்ள வேண்டும். ஏக்காரணம் கொண்டும் டாஸ்மாக் பணியாளர்களை இதில் ஈடுபடுத்தக்கூடாது. இவ்வாறு நியமிக்கப்படும் பணியாளர்கள் மது பாட்டில்களை கையாளக்கூடாது. காலி பாட்டில்கள் சேகரிப்பு மற்றும் தின்பண்டங்கள் விற்பது மட்டுமே அவரது பணியாக இருத்தல் வேண்டும். இப்பணியில் ஈடுபடுத்தப்படுபவர்கள் குழந்தை ஊழியர்களாக இருத்தல் கூடாது. 21 வயது முதிர்வடைந்த ஆண்கள் மட்டுமே பணியில் அமர்த்தப்பட வேண்டும்.

15) காலி பாட்டில் சேகரிப்பதிலோ, தின்பண்டங்கள் விற்பதிலோ ஏற்படும் சட்ட சிக்கல்கள் மற்றும் வழக்குகளையும் ஒப்பந்ததாரரே எதிர்கொள்ள வேண்டுமேயொழிய டாஸ்மாக் நிறுவனத்தை தொடர்புபடுத்த இயலாது.

16) மதுக்கூடத்தின் சுற்றுபுறத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வாடிக்கையாளரால் விட்டுச் செல்லப்படும் உணவு கழிவுகள், காலி டம்ளர்கள் போன்ற இனங்கள் ஒப்பந்ததாரரின் பணியாளரால் உடனுக்குடன் நீக்கப்பட்டு மதுக்கூடம் சுத்தம் செய்யப்படுவதும் குப்பைகளை அகற்றுவதும் ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

17) டாஸ்மாக் கடைகளின் வேலை நேரத்தை ஒட்டியே மதுக்கூடங்களின் வேலை நேரம் காலை 10.00 மணி முதல் இரவு 10.00 வரை ஆகும். அந்த வேலை நேரத்தின்போது மட்டுமே ஒப்பந்தகாரருக்கு/அவரது பணியாளருக்கு மதுக்கூடத்தில் அனுமதியளிக்கப்படும். மேற்படி தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பதில் ஒப்பந்ததாரால் நியமிக்கப்படும் பணியாளருக்கான அடையாள அட்டை மாவட்ட மேலாளரால் வழங்கக்படும். அடையாள அட்டையில்லாத வெளி நபர் எவரும் மேற்படி பணியில் ஈடுபடுத்தப்படகூடாது.

18) மேற்படி உரிம நகல் மதுக்கூடத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

19) தின்பண்ட உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர் தான் விற்பனை செய்யும் தின்பண்டங்களுக்கான உரிய விலைப்பட்டியலை பார்வைக்கு வைப்பதுடன் தின்பண்டங்கள் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்டதாகவும், சுத்தமாக பராமரிக்கப்பட்டதாகவும் அது தொடர்பான அரசின் அத்தனை சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டனவாகவும் இருத்தல் அவசியம். இந்த தின்பண்ட பொருள்கள் தரக்கட்டுப்பாடு சோதனைக்கு உட்படுத்தப்படும்.

20) மேற்படி உரிமத்தை ஒப்பந்ததாரர் வேறு எவருக்கும் மாற்றி தரக்கூடாது. இவ்விற்பனையை டாஸ்மாக் அனுமதி பெறாத வெளி நபர் கண்காணிக்கவும் அனுமதிக்க கூடாது.

21) திண்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பு தொடர்பான கணக்கு வழக்குகளை டாஸ்மாக் நிர்வாகம் கோரினால் அந்த விபரங்களை டாஸ்மாக் நிறுவனத்திற்கு உடன் அளிப்பது உரிமதாரரின் கடமையாகும்.

22) அதேபோல் ஆய்வுக்கு வரும் டாஸ்மாக் அலுவலர்களுக்கு அவர்களது ஆய்வின்போது போதிய ஒத்துழைப்பினை ஒப்பந்தகாரர் அளிக்க வேண்டும். டாஸ்மாக் நியமிக்கும் பல்வேறு ஆய்வுக் குழுக்கள் எந்நேரமும் மதுக்கூடங்களை ஆய்வு செய்திட முழு உரிமை உண்டு.

23) ஒப்பந்தகாரர் நியமிக்கும் பணியாளர்களின் நன்னடத்தைக்கு ஒப்பந்தகாரரே முழு பொறுப்பாகும். அவரது பணியாளர்கள் சண்டைச் சச்சரவுகளில் ஈடுபடுவதோ டாஸ்மாக் நிறுவனத்தின் சொத்துக்களுக்கு இழப்பு ஏற்படும் வகையில் நடந்து கொள்வதோ அனுமதிக்கப்பட மாட்டாது. தவறும்பட்சத்தில் மாவட்ட மேலாளரால் நிர்ணயிக்கப்படும் இழப்புத் தொகையினை ஒப்பந்ததாரர் டிமாண்ட் டிராப்ட் மூலம் டாஸ்மாக் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். இவ்விஷயத்தில் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் நிர்ணயிக்கும் இழப்புத் தொகையே இறுதியானது.

24) மதுக்கூடத்தினை பொழுது போக்கு இடமாகவோ, சூதாடும் இடமாகவோ, ஒப்பந்தகாரர் பயன்படுத்தக்கூடாது.

25) மதுக்கூடத்தில் அரசால் தடை செய்யப்பட்ட எந்த பொருளும் விற்கக்கூடாது. மேலும் பீடி, சிகரெட் போன்றவை விற்க கூடாது.

26) குளிர்பானங்கள், குடிநீர் ஆகியவற்றில் **ISI** தரச்சான்று பெற்றவையே பயன்படுத்த வேண்டும்.

27) மதுக்கூடத்தில் எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்களை மதுக்கூடத்திலேயோ, சுற்றிலோ, ஒட்டியோ, கீற்றுக் கொட்டகை போன்றனவோ பயன்படுத்தல் கூடாது.

28) அரசு அல்லது டாஸ்மாக் நிறுவனம் அவ்வப்போது விதிக்கும் இதர கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்கள், விதிகள் போன்றவற்றிற்கு முழுவதும் ஒப்பந்தக்காரர் கட்டுப்படவேண்டும்.

29) ஒப்பந்ததாரருக்கும், டாஸ்மாக்கிற்கும் ஏதாவது வழக்கு ஏற்படின் வழக்கின் எல்லை ஒப்பந்தம் செய்யப்பட்ட சம்மந்தப்பட்ட மாவட்ட மேலாளரின் அதிகார எல்லைக்கு உட்பட்டதாகும்.

30) சேகரிக்கும் காலி பாட்டில்கள் யாருக்கு ஒப்பந்தக்காரர் விற்கிறார் என்பதற்கான விவரங்களை முகவரியுடன் கூடிய முழு விபரங்களும் அவ்வப்போது மாவட்ட மேலாளருக்கு அளிக்க வேண்டும்.

31) அரசின் பிற துறைகள் இது தொடர்பாக ஏற்கனவே விதித்துள்ள (அல்லது) விதிக்கும் அனைத்து சட்ட திட்டங்களும் ஒப்பந்தக்காரரை கட்டுப்படுத்தும்.

32) தின்பண்ட விற்பனை தவிர மதுக்கூடத்திற்குள் தனியே மதுபான விற்பனையிலோ, இருப்பு வைப்பதிலோ ஒப்பந்தக்காரர் ஈடுபடக்கூடாது.

33) முன்னாள் மதுபான சில்லரை விற்பனை உரிமதாரர் (Ex-Licensee) மற்றும் முன்னாள் தின்பண்ட விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரிப்பு உரிமம் பெற்றவருக்கு அவரது கடந்த கால செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு உரிமம் வழங்க முடிவு செய்யப்படும்.

34) நிர்வாக காரணங்களை ஒட்டி மதுக்கடையை மூட வேண்டியிருந்தாலோ அல்லது வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியிருந்தாலோ ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு புதிய ஒப்பந்தப்புள்ளி பெறப்படும்.

35) அரசு கொள்கையில் மாற்றம் ஏற்படின் இந்த ஒப்பந்தம் தானாகவே முடிவுறும்.

36) 15 நாட்கள் முன்னறிவிப்பு கொடுத்து இந்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வர டாஸ்மாக் நிறுவனத்திற்கு முழு உரிமை உண்டு.

37) தின்பண்ட விற்பனை காலி பாட்டில் சேகரிப்பு உரிமம் பெற்றவர் மத்திய/மாநில அரசுகளால் அவ்வப்போது அமல்படுத்தப்படும் மத்திய/மாநில வரிகளை உதாரணமாக, விற்பனை வரி, சேவை வரி, வருமானவரி (TDS,TCS,etc.) சுங்கவரி மற்றும் பிற வரிகள் அல்லது கட்டணங்கள் , உரிமக் கட்டணத்திற்கு மேலாக செலுத்த வேண்டும். மேலும் அரசத்துறை நிதி நிறுவனங்கள்/ஆணையங்களோடு சட்டப்படி பதிவு செய்ய வேண்டுமாயின் அதற்கும் கட்டுப்படவேண்டும். இவைகளைத் தவிர பணியாளர் சேமநல நிதி ஆணையர் மற்றும் பணியாளர்கள் காப்பீட்டு கழகத்தால் (ESIC) ஆணைகள் ஏதாவது பிறப்பிக்கப்பட்டால் அதற்கும் கட்டுப்பட வேண்டும்.

-------

கையொப்பம்.